ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1994/72 - 2016 නොවැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.11.24
*1994/72 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க றணவக்க ஆகிய நான், (அட்டவணை I மற்றும் II இன் நிரல் I இல் குறிப்பிடப்பட்ட ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளைத் தவிர்ந்த) அதன் நேரொத்த பகுதியின் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லைகளும் வரையறைகளையும் கொண்டுள்ளதுமான பகுதியினை அபிவிருத்திக்குப் பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அப்பகுதியினை நகர அபிவிருத்திப் பகுதியாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

பாட்டலி சம்பிக்க றணவக்க,
பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சு,
17 மற்றும் 18 ஆவது மாடிகள்,
“சுஹுருபாய”,
சுபதிபுர வீதி,
பத்தரமுல்லை,
2016.11.18.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை I**

வலஸ்முல்லை நகர அபிவிருத்திப் பகுதியுடன், மேலதிக பிரதேச சபைப் பகுதியினை நகர அபிவிருத்திப் பகுதியாக பிரகடனப்படுத்தல்.

*நிரல் I*

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், வலஸ்முல்லை பிரதேச செயலகப் பிரிவிலான சகல காணிகளான, கி. அ. பி. இல. 448 கலஹிட்டியா கிழக்கு, கி. அ. பி. இல. 450 கலஹிட்டியா தெற்கு, கி. அ. பி. இல. 451 ஒமாறா மேற்கு, கி. அ. பி. இல. 454 வலஸ்முல்லை கிழக்கு, கி. அ. பி. இல. 456 கொஹொலான, கி. அ. பி. இல. 460 எத்பிட்டி, கி. அ. பி. இல. 465 தலுவக்கொடை மற்றும் ஒக்கவெலை பிரதேச செயலகப் பிரிவிலான கி. அ. பி. இல. 466 கனுமுல்தெனியா மேற்கு, கி. அ. பி. இல. 467 ஓலு ஆற, கி. அ. பி. இல. 470 விஜயசிபுர, கி. அ. பி. இல. 476 நட்டுவல, கி. அ. பி. இல. 480 மொறகந்தகொடை, கி. அ. பி. இல. 481 மேல் தலஹாகம்வடுவ, கி. அ. பி. இல. 482 கீழ் தலஹாகம்வடுவ, கி. அ. பி. இல. 484 கடிகமுவை அத்துடன் ஏற்கனவே 2004.06.23 எனத் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானப் பத்திரிகை இல. 1346/9 மூலம் வலஸ்முல்லை நகர அபிவிருத்திப் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்ட கி. அ. பி. இல. 453 வலஸ்முல்லை தெற்கு, கி. அ. பி. இல. 455 வலஸ்முல்லை வடக்கு, கி. அ. பி. இல. 457 மேல் வலஸ்முல்லை, கி. அ. பி. இல. 458 கீழ் வலஸ்முல்லை, கி. அ. பி. இல. 459 வலஸ்முல்லை மேற்கு ஆகியன, நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு வரையறைகளாலும் எல்லைகளாலும் சூழப்பட்டுள்ளது.

*நிரல் II*

வடக்கு : எத்பிட்டிய கி. அ. பி. இனது மேற்கு எல்லையும், யஹலமுல்லை கி. அ. பி. இனது வடக்கு எல்லையும் சந்திக்கும் புள்ளியிலிருந்து வடகிழக்கே எத்பிட்டிய கி. அ. பி. இனது வடக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது எத்பிடிய கி. அ. பி. இனது கிழக்கு எல்லையினை சந்திக்கும் வரை ; பின்பு தென் கிழக்கே, தெற்கே மற்றும் தென்கிழக்கே எத்பிட்டிய கி. அ. பி. இனது கிழக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது ஒமாறா மேற்கு கி. அ. பி. இனது வடக்கு எல்லையினை அடையும் வரை ; பின்பு கிழக்கே, வடகிழக்கே, வடக்கே மற்றும் கிழக்கே ஒமாறா மேற்கு கி. அ. பி. இனது வடக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது ஒமாறா மேற்கு கி. அ. பி. இனது கிழக்கு எல்லையினை அடையும் வரை ; பின்பு தென்கிழக்கே ஒமாறா மேற்கு கி. அ. பி. இனது கிழக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது கலஹிட்டியா தெற்கு கி. அ. பி. இனது வடக்கு எல்லையினை சந்திக்கும் வரை ; பின்பு வடகிழக்கே கலஹிட்டி தெற்கு கி. அ. பி. இனது வடக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது கலஹிட்டி தெற்கு கி. அ. பி. இனது கிழக்கு எல்லையினை அடையும் வரை ;

கிழக்கு : கடைசியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து தென் கிழக்கே, தெற்கே, மேற்கே, தெற்கே, தென்கிழக்கே மற்றும் தென்மேற்கே கலஹிட்டி தெற்கு கி. அ. பி. இனது கிழக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது, கலஹிட்டி கிழக்கு கி. அ. பி. இனது வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை ; பின்பு தென் கிழக்கே மற்றும் தென்மேற்கே கலஹிட்டியா கிழக்கு கி. அ. பி. இனது கிழக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது மொறகந்தேகொடை கி. அ. பி. இனது வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை ; பின்பு தென்கிழக்கே, மேற்கே மற்றும் தென்மேற்கே மொறகந்தேகொடை கி. அ. பி. இனது கிழக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது தலஹாகம் வடுவ கி. அ. பி. இனது வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை ; பின்பு தென்மேற்கே, தெற்கே, தென்மேற்கே, தெற்கே மற்றும் தென்மேற்கே கீழ் தலஹாகம்வடுவ கி. அ. பி. இனது கிழக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது கடிகமுவை மேற்கு கி. அ. பி. இனது வடக்கு எல்லையினை அடையும் வரை ; பின்பு கிழக்கே, வடகிழக்கே, தென்கிழக்கே மற்றும் வடகிழக்கே வடக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது கடிகமுவை மேற்கு கி. அ. பி. இனது கிழக்கு எல்லையினை அடையும் வரை ; பின்பு தென்மேற்கே மற்றும் தெற்கே கடிகமுவை மேற்கு கி. அ. பி. இனது கிழக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது கடிகமுவை மேற்கு கி. அ. பி. இனது தெற்கு எல்லையினை அடையும் வரை ;

தெற்கு : கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து தென்மேற்கே கடிகமுவை மேற்கு கி. அ. பி. இனது தெற்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது தலுவாக்கொடை கி. அ. பி. இனது கிழக்கு மற்றும் தெற்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை ; பின்பு

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| | தென்மேற்கே மற்றும் மேற்கே தலுவாக்கொடை கி. அ. பி. இனது தெற்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது தலுவாக்கொடை கி. அ. பி. இனது மேற்கு எல்லையினை அடையும் வரை ; |
| | மேற்கு : கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து, வடமேற்கே மற்றும் வடகிழக்கே தலுவாக்கொடை கி. அ. பி. இனது மேற்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது நத்துவலை கி. அ. பி. இனது தெற்கு மற்றும் மேற்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை ; பின்பு வடமேற்கே, வடக்கே, வடமேற்கே, வடகிழக்கே வடமேற்கே, தென்மேற்கே, வடமேற்கே, வடகிழக்கே மற்றும் வடமேற்கே நத்துவலை கி. அ. பி. இனது மேற்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது விஜயசிறிபுர கி. அ. பி. இனது தெற்கு மற்றும் மேற்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை ; பின்பு வடக்கே மற்றும் வடமேற்கே, விஜயசிறிபுர கி. அ. பி. இனது மேற்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது ஓலுஆற கி. அ. பி. இனது மேற்கு மற்றும் தெற்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை ; பின்பு வடமேற்கே, வடகிழக்கே மற்றும் வடக்கே ஓலுஆற கி. அ. பி. இனது மேற்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது கனுமுல்தெனியா மேற்கு கி. அ. பி. இனது தெற்கு எல்லையினை சந்திக்கும் வரை ; பின்பு வடமேற்கே கனுமுல்தெனியா மேற்கு கி. அ. பி. இனது தெற்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது ஓலுஆற இனது மற்றைய பகுதியின் தெற்கு எல்லையினை அடையும் வரை ; பின்பு வடமேற்கே குறிப்பிட்ட ஓலுஆற கி. அ. பி. இனது தெற்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது குறிப்பிட்ட ஓலுஆற கி. அ. பி. இனது மேற்கு எல்லையினை அடையும் வரை ; பின்பு வடமேற்கே குறிப்பிட்ட ஓலுஆற கி. அ. பி. இனது மேற்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது கனுமுல்தெனியா மேற்கு கி. அ. பி. இனது தெற்கு எல்லையினை அடையும் வரை ; பின்பு மேற்கு கனுதெனியா கி. அ. பி. இனது தெற்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது கனுமுல்தெனியா மேற்கு கி. அ. பி. இனது மேற்கு எல்லையினை சந்திக்கும் வரை ; பின்பு வடமேற்கே, வடக்கே, வடமேற்கே மற்றும் வடக்கே கனுமுல்தெனியா மேற்கு கி. அ. பி. இனது மேற்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது கனுமுல்தெனியா மேற்கு கி. அ. பி. இனது வடக்கு எல்லையினை அடையும் வரை ; பின்பு, தென்கிழக்கே மற்றும் வடகிழக்கே கனுமுல்தெனியா மேற்கு கி. அ. பி. இனது வடக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது மேல் வலஸ்முல்லை கி. அ. பி. இனது மேற்கு எல்லையினை அடையும் வரை ; பின்பு வடமேற்கே மற்றும் வடகிழக்கே மேல் வலஸ்முல்லை கி. அ. பி. இனது மேற்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது எத்பிட்டிய கி. அ. பி. இனது மேற்கு எல்லையினை சந்திக்கும் வரை ; பின்பு வடமேற்கே எத்பிட்டிய கி. அ. பி. இனது மேற்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது தொடக்கப் புள்ளியினை அடையும் வரை. |

## அட்டவணை II

*பிரகடனப்படுத்தப்பட்ட வீரஹெட்டி நகர, நகர அபிவிருத்திப் பகுதியுடன், மேலதிக பிரதேச சபைப் பகுதியினை நகர அபிவிருத்திப் பகுதியாக பிரகடனப்படுத்தல்.*

*நிரல் I*

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், வீரஹெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள, சகலஸ்முல்லை, கி. அ. பி. இல. 389 மண்டதுாவ, கி. அ. பி. காணிகளான கி. அ. பி. இல. 390 அக்றஹேன, நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு வரையறைகள் மற்றும் எல்லைகளால் சூழப்பட்டு, அத்துடன் ஏற்கனவே 2006.11 எனத் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இல. 1472/5 இன் மூலம் நகர அபிவிருத்திப் பகுதியாக பிரகடனப் படுத்தப்பட்ட, கி. அ. பி. இல. 397 உடுகிரிவிலை, கி. அ. பி. இல. 398 யக்க இல. 388 வீரஹெட்டி மேற்கு, கி. அ. பி. இல. 387 வீரஹெட்டி கிழக்கு, கி. அ. பி. இல. 391 புத்தியாகம கிழக்கு, கி. அ. பி. இல. 392 புத்தியாகம மேற்கு, கி. அ. பி. இல. 439 கெப்பெட்டியா வடக்கு, கி. அ. பி. இல. 440 புத்தியாகம வடக்கு ஆகியனவற்றையும் அடக்கியதாகும்.

*நிரல் II*

வடக்கு : மண்டாதுாவ கி. அ. பி. இனது மேற்கு மற்றும் தெற்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியிலிருந்து, வடகிழக்கே, தென்கிழக்கே, வடகிழக்கே, தென்கிழக்கே மற்றும் வடகிழக்கே மண்டாதுாவ கி. அ. பி. இனது தெற்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது வக்கமுல்லை கி. அ. பி. இனது மேற்கு எல்லையினை அடையும் வரை.

கிழக்கு : கடைசியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து, வக்கமுல்லை கி. அ. பி. மேற்கு எல்லையோரமாக தென் கிழக்கே, தெற்கே, கிழக்கே, தென்கிழக்கே மற்றும் தென்மேற்கே கீறப்பட்ட கோடானது வீரஹெட்டி கிழக்கு கி. அ. பி. இனது கிழக்கு எல்லையினை அடையும் வரை.

தெற்கு : கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து வீரஹெட்டி கிழக்கு கி. அ. பி. இனது கிழக்கு எல்லையோரமாக வடமேற்கே, தென் மேற்கே, மேற்கே, தென்மேற்கே, வடமேற்கே மற்றும் தென் மேற்கே கீறப்பட்ட கோடானது 965.08 மீற்றர் தூரத்தில் ஒரு புள்ளியினை அடையும் வரை.

மேற்கு : கடைசியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து, வீரஹெட்டி கிழக்கு கி. அ. பி. இனது கிழக்கு எல்லையோரமாக வடமேற்கே கீறப்பட்ட கோடானது வீரஹெட்டி கிழக்கு, வடக்கு எல்லையினை அடையும் வரை ; பின்பு, மேற்கே மற்றும் வடமேற்கே வீரஹெட்டி கிழக்கு கி. அ. பி. இனது வடக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது வீரஹெட்டி மேற்கு கி. அ. பி. இனது தெற்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை ; பின்பு, வடகிழக்கே, வடமேற்கே மற்றும் வடகிழக்கே வீரஹெட்டி மேற்கு கி. அ. பி. இனது கிழக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது தொடக்கப் புள்ளியினை அடையும் வரை.

*12 - 479*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.